# செயலாற்றுகை அறிக்கை

# 2025

தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

2025 வருடத்திற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

செலவினத் தலைப்பு இல . 240

உள்ளடக்கம்


1 நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு .................................... 4

1.1 அறிமுகம் .................................... 4

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள் .................................... 4

1.3 பிரதானபணிகள் .................................... 5

1.3.1 எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வ.செ.தி. தயாரிப்புச் செயன்முறை .................................... 5

1.3.2 நடைமுறை வருடத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல் .................................... 5

1.3.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் .................................... 6

1.3.4 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான செயற்பாடுகள் 6

1.3.5 வருடாந்த தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள நோக்கெல்லை கீழ் வரும் பொது நிறுவனங்களின் கண்காணிப்பு தொடர்பான செயற்பாடுகள் .................................... 6

1.3.6 ஏனைய செயற்பாடுகள் .................................... 7

1.4 நிறுவனக் கட்டமைப்பு .................................... 8

2 2025 ஆண்டுக்கான முன்னேற்றமும் எதிர்கால நோக்கு .................................... 9

2.1 செயலாற்றுகை விபரம் .................................... 11

2.2 அரச செலவின முகாமைத்துவம் .................................... 20

2.2.1 2025 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தல் .................................... 20

2.2.2 குறைநிரப்பு மதிப்பீடுகள் .................................... 20

2.3.1 செலவினங்களின் ஆகக்கூடிய வரையறைகள் .................................... 25

2.3.2 பெறுகைகளின் ஆகக்குறைந்த வரையறைகள் .................................... 26

2.3.3 அரச அலுவலர்களின் முற்பண "பி" கணக்குகளின் வட்டி வருமானம் .................................... 26

2.3.4 வணிகம், களஞ்சியங்கள், பிற முற்பணக் கணக்கு நிதிச் செயலாற்றுகை .................................... 26

2.3.5 முற்பண வரையறைகளுக்கான திருத்தம் .................................... 26

3 வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம் .................................... 28

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று .................................... 28

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று .................................... 29

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று ........ 31
3.4 நிதியியற் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........ 33
3.4.1 அறிக்கையிடல் அடிப்படை ........ 33
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை – ஏற்புடையதல்ல ........ 34
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ........ 34
ரூபா ,000........ 34
3.7 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை........ 34
3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை........ 35
2025 வருடத்தின் போது, கணக்காய்வாளர் நாயகத்தினால் இத்திணைக்களத்துக்கு ஏழு (07) கணக்காய்வு வினாக்கள் அனுப்பப்பட்டன. இவற்றுள் அனைத்துக்கும் உரிய முறையில் பதிலளிக்கப்பட்டுள்ளன. ........ 35
3.9 நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் அபிப்பிராயம் ........ 35
பின்னிணைப்பு – I என இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது ........ 35
4 செயலாற்றுகைச் சுட்டிகள் ........ 36
4.1 அரச செலவினம் தொடர்பில் 2025 இல் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள்........ 36
5 நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) அடைவுச் செயலாற்றுகை........ 37
6 மனித வள விபரம் ........ 39
6.1 பதவியணி முகாமைத்துவம் ........ 39
6.2 மனிதவளங்கள் பற்றாக்குறை மற்றும் செயலாற்றுகை ........ 39
6.3 மனித வள அபிவிருத்தி........ 39
7 இணக்கப்பாட்டு அறிக்கை........ 47

அட்டவணைகளின் பட்டியல்

2.2.2 குறைநிரப்பு மதிப்பீடுகள்........21
2.2.3 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்........22
2.2.6 செலவின வகுதிகளின் கீழான அரசாங்க செலவினம்........24
2.2.7 அனர்த்த திகதி முதல் 2025.12.31 திகதி வரை ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்........25

# 1 நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களமானது அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பாராளுமன்ற சட்ட ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட வேலைச் சட்டகத்திற்குள் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படுகின்றது. நடுத்தரகால பேரண்ட அரசிறை வேலைச் சட்டகத்திற்குள் இணங்கும் வகையில் நடுத்தரகால செலவின வேலைச்சட்டகத்தினை (Medium Term Expenditure Framework - MTEF) துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கும் மைய நிறுவனமாக இத்திணைக்களம் தொழிற்படுகின்றது. இச்செயன்முறையில் நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடரான தொடர்புகளை பேண முடிகின்றது.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

**தூரநோக்கு**

அரச நிதி வளங்களினை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் ஒதுக்கீடுசெய்தல் மற்றும் முகாமை செய்வதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தி.

**பணிக்கூற்று**

அரசாங்க பொருட்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சேவைகளின் வினைத்திறன் மிக்க வழங்கல்களுக்காக பொது நிதி வளங்களின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு மூலம் அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

**நோக்கங்கள்**

- நிதி வளங்களினை பயன்வலு மற்றும் வினைத்திறன் மிக்கதாக ஒதுக்கீடு செய்தல்.
- அரசிறை ஒழுங்குகளைப் பேணுதல்.
- அரசிறை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல்.
- அரசிறை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல்.
- அரசாங்கக் கொள்கை மற்றும் நிதி வரையறைகளுக்குட்பட்டு அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் என்பவற்றுக்கான வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

## 1.3 பிரதானபணிகள்

### 1.3.1 எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வ.செ.தி. தயாரிப்புச் செயன்முறை

எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி நடுத்தரகால வரவுசெலவுத்திட்ட வேலைச்சட்டகத்தினை (Medium Term Budgetary Framework - MTBF) பூர்த்திசெய்வதுடன் அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொள்ளல்.
- வரவு செலவுத் திட்ட அழைப்புக்கான சுற்றுநிருபத்தினை விநியோகித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடி வரைவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள் / மதியுரைக் கூட்டங்களை நடாத்துதல்.
- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி வருமானம், செலவினம், நிதியிடல், கடன்பெறும் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) வரையறைகளைத் தீர்மானித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான மதிப்பீடுகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சட்டமா அதிபர் மற்றும் சட்ட வரைஞரிடமிருந்து வரைவு ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல். (முதலாவது வாசிப்பு)
- வரைவு வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டினை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொள்ளல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான குழு நிலைத் திருத்தங்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு - குழுநிலை விவாதத்தில் பங்குபற்றுதல்.
- ஆணைப்பத்திரத்தினைத் தயாரித்தல் மற்றும் கௌரவ நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- செலவின அதிகாரமளிப்புச் சுற்றுநிருபத்தினை விநியோகித்தல்.

### 1.3.2 நடைமுறை வருடத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல்

தேசிய வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வரவுசெலவுத்திட்ட செயற்படுத்துகை தொடர்பாக அங்கீகாரமளித்தல் உள்ளடங்களாக வழிகாட்டல்களையும் சுற்றுநிருபங்களையும் வெளியிடுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு வரையறைகள் மற்றும் பராமரிக்கப்படும் அரசிறை ஒழுங்குகளுக்குள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக நிதி வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாடுகளை விதித்தல்.
- தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு செலவின முகவராண்மைகளுடன் இணைந்து செயற்படுதல்.
- நிதி ஒதுக்கீடுகளை வினைத்திறன் மிக்கதாக உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீட்டினை மீள ஏற்பாடு செய்தல் (Reallocation) மற்றும் மாற்றுதல் (Transfer).
- முன்னர் “அபிவிருத்திச் செயல்பாடுகள்” திட்டம் என அறியப்பட்டிருந்த வருடாந்திர வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் மேலாண்மை.

### 1.3.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

வர்த்தக, களஞ்சியசாலைகள், அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்குகளுக்கான வரையறைகளைத் தீர்மானித்தல் மற்றும் தேவையான போது முற்பணக் கணக்குச் செயற்பாட்டு வரையறைகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

### 1.3.4 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான செயற்பாடுகள்

- வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைப் பகுப்பாய்வு செய்து மிகப் பொறுத்தமான நிறுவனங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் தேவையான வழிகாட்டல்களையும் வழங்குதல்.

- தேவையானவாறு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல் தொடர்பான பின்னூட்டல், மீளாய்வு மற்றும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.

- விசேட வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல். (வாகன குத்தகை / யூலை வேலை நிறுத்தக்காரர்கள் கொடுப்பனவு/மோட்டார் சைக்கிள் வழங்கல்)

### 1.3.5 வருடாந்த தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள நோக்கெல்லை கீழ் வரும் பொது நிறுவனங்களின் கண்காணிப்பு தொடர்பான செயற்பாடுகள்

- 124 பொது தொழில்முயற்சிகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடுசெய்தல் மற்றும் அவற்றினது வரவு செலவுத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான உதவியை வழங்குதல்.

- 2003.10.28 ஆந் திகதிய 17 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கைபடி, அந்த பொது நிறுவனங்களின் அதிகாரிகளின்

வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கான செலவினங்களைச் செய்வதற்கு தேவையான அனுமதியினை வழங்குதல்.

- வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகளிலிருந்து மாதாந்த கட்டுநிதியினை விடுவிப்பதற்காக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்குப் பரிந்துரைகளை வழங்குதல்.

- பதவியணி திருத்தங்களுக்கான பரிந்துரைகளை செய்தல் மற்றும் அந்த பொது நிறுவனங்களின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல்.

- வழக்கமான செயல்திறன் மறுஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அவர்களின் செயல்திறனை மேம்படுத்த தேவையான கொள்கை வழிகாட்டுதல்களை வழங்குதல்.

**1.3.6 ஏனைய செயற்பாடுகள்**

- பாராளுமன்ற உப குழுவொன்றான அரச நிதிக் குழு (COPF) கூட்டங்களில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- பாராளுமன்ற துணைக்குழுக்களான அரச கணக்குகளுக்கான குழு (COPA) மற்றும் அரச தொழில்முயற்சிகளுக்கான குழு (COPE) ஆகியவற்றின் கூட்டங்களில் திரைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் ஆதரவை வழங்குதல்.

- பாராளுமன்ற குழுக்கள், அதிமேதகு சனாதிபதி மற்றும் பிரதமரின் கூட்டங்களில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தல்.

- தேசிய வரவு செலவுத்திட்டம் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கான அவதானிப்புகளை தயாரித்தல்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு




| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப.நா | - பணிப்பாளர் நாயகம் | மே.ப.நா | - மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | க | - கணக்காளர் |
| ப | - பணிப்பாளர் | பி.ப | - பிரதிப் பணிப்பாளர் | நி.அ | - நிருவாக அலுவலர் |
| உ.ப | - உதவிப் பணிப்பாளர் | மு.சே.அ | - முகாமைத்துவ சேவை அலுவலர் | மொ.அ. | - மொழிபெயர்ப்பு அலுவலர் |
| த.தொ.உ | - தகவல் தொழில்நுட்ப அலுவலர் | அ.அ | - அபிவிருத்தி அலுவலர் | அ.உ | - அலுவலக உதவியாளர் |

## 2 2025 ஆண்டுக்கான முன்னேற்றமும் எதிர்கால நோக்கு

முந்தைய ஆண்டுகளைப் போலவே, 2025 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத் தயாரிப்புச் செயன்முறை 2024 இல் தொடங்கப்பட்டது. அதன்படி, வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கை இலக்கம் 02/2024 2024 ஆகஸ்ட் 12 அன்று வெளியிடப்பட்டதுடன் மற்றும் முன்னாள் அமைச்சுக்களுடன் வரவுசெலவுத்திட்ட விவாதங்கள் நடத்தப்பட்டன. இருப்பினும், 2024 செப்டம்பர் 24 அன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, அமைச்சரவையின் கட்டமைப்பில் தற்காலிக அடிப்படையில் மறுசீரமைப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட விவாதங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. புதிய பாராளுமன்றம் 2024 நவம்பர் 21 அன்று கூடிய போதிலும், 2024 ஆம் ஆண்டின் மீதமுள்ள காலகட்டத்தில், சட்டப்பூர்வமாக பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி, 2025 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற போதுமான நேரம் இருக்கவில்லை.

எனவே, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 23(1) 90 இன் படி, 2025 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் அரசாங்க செலவினங்களை அங்கீகரிப்பதற்காக வாக்குப் பதிவுக் கணக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி வாக்குப் பதிவுக் கணக்கு 2024.12.06 அன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது

இதற்கிடையில், 2024.11.25 ஆம் திகதியிட்ட வர்த்தமானி இலக்கம் 2412/08 மூலம் நிறுவப்பட்ட புதிய அரசாங்கத்தின் கொள்கை அறிக்கை மற்றும் புதிய அமைச்சரவைக் கட்டமைப்புகளுக்கு இணங்க, வரவு செலவுத் திட்ட அழைப்பு சுற்றறிக்கை இலக்கம் 02/2024- இற்கமைவாக புதிதாக உருவாக்கப்பட்ட அமைச்சுக்களுடன் கலந்தாலோசித்து, 2025 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட தற்காலிக வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை மீளாய்வு செய்யவும், திருத்தவும் மற்றும் சரிசெய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதன்பிறகு, வருடாந்த வரவு செலவுத் திட்டத் தயாரிப்புக் கட்டமைப்பின் கீழ் உள்ள நடைமுறை நடவடிக்கைகளைப் பின்பற்றி, 2025 ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம், 2025.03.22 அன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அதன்பிறகு, 2025 ஆம் ஆண்டில் செலவினங்களை மேற்கொள்வது தொடர்பாக செலவின நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி, அங்கீகாரச் சுற்றறிக்கை இலக்கம் 01/2025, 2025.03.22 அன்று வெளியிடப்பட்டது.

மேலும், 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் உருவாக்கமும் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சுக்களுடன் கலந்தாலோசித்த பிறகு தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டு சட்ட மூலம், அனைத்து நடைமுறை வழிமுறைகளையும் பின்பற்றி, 2025.09.17 அன்று வர்தத்மானியில் வெளியிடப்பட்டு, 2025.09.26 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.. 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் தொடர்பான 2025 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்ட இலக்கம் 23, 2025.12.05 அன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 2026 ஆம் ஆண்டுக்கான செலவினங்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் தேசிய வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை இலக்கம் 09/2025, 2025.12.19 அன்று வெளியிடப்பட்டது.

மேலும், தித்வா புயல் தொடர்பான அனர்த்தத்துக்கு பதிலளிக்கும் விதமாக, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சீரிழந்த வாழ்க்கையை மீட்டெடுப்பதற்காக ரூ. 50 பில்லியன் மேலதிக ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்யும் பொருட்டு, 2025 ஆம் ஆண்டின் குறைநிரப்பு மதிப்பீட்டு இலக்கம் 06 செயல்படுத்தப்பட்டது.

இதற்கிடையில், தித்வா புயலால் ஏற்பட்ட திடீர் அனர்த்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்வதற்காக, 2026-ஆம் ஆண்டின் குறைநிரப்பு மதிப்பீட்டு இலக்கம் 01- 2 025 டிசம்பர் மாதத்தில் செயல்படுத்தப்பட்டது.

**பிரசை வரவுசெலவுத்திட்டம்**

வரவுசெலவுத்திட்ட வெளிப்படைத்தன்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம், 2023 முதல் ஆண்டுதோறும் பிரசை வரவுசெலவுத் திட்டங்களைத் தயாரித்து வருகிறது. இதன் நோக்கம், அரசாங்க வரவுசெலவுத்திட்ட் பற்றிய தகவல்களை எளிமைப்படுத்தப்பட்ட, தொழில்நுட்பம் குறைவான மற்றும் பொதுமக்களுக்கு உகந்த வடிவத்தில் பொதுமக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் பரப்புவதாகும். 2024 வரவுசெலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் போது, இந்த ஆவணம் இலங்கையில் முதல் முறையாக பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 2024 ஆகஸ்ட் 8 அன்று நிறைவேற்றப்பட்ட பொது நிதி முகாமைத்துவச் சட்டம், வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் பொதுமக்களுக்கு பொருத்தமான பதிப்பைத் தயாரித்து, அதை வருடாந்த வரவுசெலவுத் திட்டத்டன் சேர்த்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை கட்டாயமாக்கியுள்ளது.









## 2.1 செயலாற்றுகை விபரம்

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 1. 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினைச் செயற்படுத்தல் மற்றும் செலவின முகாமைத்துவம். | செலவின முகாமைத்துவம் குறித்த அறிவுறுத்தல்களை வழங்குவதோடு, செலவினம் செய்வதற்கான அங்கீகாரத்தை நடைமுறைப்படுத்தும் சுற்றறிக்கைகளை வெளியிடுதல். | அரசாங்கச் செலவுகளை திறமையாக நிர்வகித்தல். | 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் 2025 செலவினங்களை மேற்கொள்வதற்கும் பொதுச் செலவினங்களை நிர்வகிப்பதற்குமான அங்கீகாரம் 2025.03.22 ஆந் திகதிய 01/2025 ஆம் இலக்க தேசிய வ.செ.தி. சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. |
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 5 (1)-இன் படி F.R 66 மற்றும் F.R 69 (வயமன்ட் நடைமுறை) இன் கீழ் நிதி ஏற்பாடுகளை மாற்றுவதற்கான அங்கீகாரம்.<br><br>2024 ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 24 (4) இன் படி, வயமன்ட் நடைமுறையின் கீழ் செய்யப்பட்ட பரிமாற்றங்கள் குறித்து பாராளுமன்றத்திற்கு காலமுறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். | அங்கீகரிக் கப்பட்ட மதிப்பீட்டிற்குள் செலவினத்தை முகாமை செய்தல்.<br><br>பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தில் விதிக்கப் பட்டுள்ள விதிமுறைகளுக் குக் கட்டுப்பட்டு நடத்தல். | மேற்கூறிய அங்கீகாரங்களில், 1,853 கோரிக்கைகள் F.R. 66 இன் கீழும், 11 கோரிக்கைகள் F.R. 69-இன் கீழும் வழங்கப்பட்டன.<br><br>செப்டம்பர் மாத இறுதி வரை மேற்கொண்ட பரிமாற்றங்கள் தொடர்பான இரண்டு அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 6 (1) இன் கீழ் விதிகளை மறு ஒதுக்கீடு செய்தல். | செலவின முகவராண் மைகளின் சுமூகமான செயற்பாட்டை உறுதி செய்வதற்காக, அவற்றுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல். | எதிர்பாராத, கணிக்க முடியாத தன்மை உடைய செலவினங் களை (உதாரணமாக, பெருந்தொற்றுகள் மற்றும் இயற்கை பேரழிவுகள்) சமாளிப்பதற்காக, ஆண்டில் பெறப்பட்ட கூடுதல் ஒதுக்கீட்டுக் கோரிக்கைகளுக்கு இணங்க, 350 மேலதிக ஒதுக்கீட்டுக் கடிதங்கள் வழங்கப்பட்டு, செலவின முகவராண் மைகளுக்கு ரூ. 136 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>தித்வா புயலால் ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலையைத் தொடர்ந்து, நிவாரணப் பணிகளுக்கு வசதி செய்வதற்காக மேலதிக ஒதுக்கீடுகளை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட, தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இல. 240 இன் கீழ் வரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் திட்டத்தின் கீழுள்ள "பேரிடர் நிவாரணம், மறுவாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டம்" என்பதன் கீழ், மேலே குறிப்பிடப்பட்ட ரூ.136 பில்லியன் மேலதிக ஒதுக்கீடுகளில் ரூ. 30 பில்லியன், 15 துணை ஒதுக்கீட்டுக் கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மேலதிக ஒதுக்கீடுகள் வழங்குவது குறித்த அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல். | ஒதுக்கீட்டுச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல். | வழங்கப்பட்ட அனைத்து மேலதிக ஒதுக்கீடுகளையும் உள்ளடக்கி, 09 அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. |
| 2. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல். | வரவு செலவு திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பது குறித்த வழிகாட்டுதல்களை (வரவு செலவு திட்ட அழைப்பு) வெளியிடுதல் | வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, அனைத்து செலவின முகவராண்மைகளாலும் ஆண்டு வரவு செலவுத் திட்டம் வகுக்கப்படுதல். | 2026 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பது குறித்த வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய 02/2025 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 2025.06.30 அன்று வெளியிடப்பட்டது. |
| | பொது திறைசேரி தொடர்புடைய திணைக்களங்களுடன் கலந்தாலோசித்து அரசிறைக் கட்டமைப்பை நிர்ணயித்தல். | அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளின் ஆண்டு இலக்குகள், சட்டக் கட்டமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வரையறைகளுக்குட்பட்டு அடையப்படுவதை உறுதி செய்தல். | 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) விரிவாக்கப்பட்ட நிதி வசதித்திட்ட ஏற்பாடு ஆகியவற்றின் விதிகளின் அடிப்படையில் அரசிறைக் கட்டமைப்பு முடிவு செய்யப்பட்டது. |
| | தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் பிற செலவின முகவராண்மைகளுடன் வரவுசெலவுத் திட்டக் கலந்துரையாடல்களை நடத்துதல். | செலவின முகவராண்மைகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள நிதி நிலைக்கு ஏற்ப செலவினங்களுக்கு முன்னுரிமை அளித்து, முறையான நிதி முகாமைத்துவ மற்றும் நிதி ஒழுக்கத்துடன் தொடர்புடைய நிதி இலக்கு | திறைசேரி செயலாளர் / பிரதிச் செயலாளர்கள் தலைமையில் / இணைத் தலைமையில், துறைசார் அமைச்சுக்களின் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிற அதிகாரிகளின் பங்கேற்புடன் ஆய்வுக் கூட்டங்கள் 2025.08.05 முதல் 2025.09.04 வரை நடத்தப்பட்டன. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
| --- | --- | --- | --- |
| | | களை அடையும் வகையில் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல். | |
| | 2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கான தேவையான ஏற்பாடுகளைச் செய்தல். | ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுதல் மற்றும் பாராளுமன் றத்தில் சமர்ப்பித்தல.<br><br>விரிவான வரைவு வரவு செலவு மதிப்பீடுகள், ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பொதுமக்கள் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய வடிவம் மற்றும் பிற ஆவணங்களை அச்சிட்டுச் சமர்ப்பித்தல். பாராளுமன்றத் தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு அங்கீகாரமளி த்தல். | 2026 ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2025.09.17 அன்று வர்த்மானியில் வெளியிடப்பட்டு 2025.09.26 அன்று பாராளுமன்றத்தில் (முதல் வாசிப்பு) தாக்கல் செய்யப்பட்டது.<br><br>வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் போது, விரிவான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் வரைவு, பொதுமக்களுக்குப் புரியும் வகையிலான ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மற்றும் பிற ஆவணங்கள் அச்சிடப்பட்டு, உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>வரவுசெலவுத்திட்ட உரை 2025.11.07 அன்று பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டது (இரண்டாம் வாசிப்பு).<br><br>இரண்டாம் வாசிப்பு விவாதம் 2025.11.08 முதல் 2025.11.15 வரை நடத்தப்பட்டது.<br><br>குழு நிலை விவாதம் 2025.11.17 முதல் 2025.12.05 வரை நடத்தப்பட்டது.<br><br>ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் 2025.12.05 அன்று பாராளு மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. |
| | கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரம் வழங்குதல். | செலவினத் திற்கு அதிகாரம ளித்தல். | |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | செலவின முகாமைத்து வத்துக்கான வழிமுறைகளை வழங்கும், செலவின அங்கீகாரச் சுற்றறிக்கையை வெளியிடுதல். | செலவினத்திற்கு அதிகாரம ளித்தல் மற்றும் செலவின முகாமைத்துவம் | 23/2025 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் சபாநாயகரால் 2025.12.05 அன்று கையொப்ப மிடப்பட்டது.<br><br>மாண்புமிகு நிதி அமைச்சரினால் 2025.12.10 அன்று ஆணைப்பத்திரம் பிறப்பிக்கப்பட்டது.<br><br>“2025 ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ், 2026 ஆம் ஆண்டில் செலவினங்களை மேற் கொள்வதற்கும் பொதுச் செலவினங்களை நிர்வகிப்பதற்குமான அங்கீகாரம்” குறித்த தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 09/2025, 2025.12.19 அன்று வெளியி டப்பட்டது. |
| 3. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் | 2024 ஆண்டில் வரம்புகள் திருத்தப்பட்ட முன்பணக் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஒப்புதலைப் பெறுதல்.<br><br>2025 ஆம் ஆண்டிற்கான முற்பணக் கணக்கு நடவடிக்கைகளைக் கையாளுதல். | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்படி, முற்பணக் கணக்குச் செயற்பாடுகளி ன் திருத்தப்பட்ட வரையறைகளை அமுல்படுத்து தல்.<br><br>முற்பணக் கணக்குச் செயற்பாடு களை அங்கீகரிக்கப் பட்ட வரையறை களுக்குள் பராமரித்தல்.<br><br>அரசாங்க அதிகாரிகள் குறைந்தபட்ச வட்டி விகிதத்தில் கடன்கள் மற்றும் முற்பணங்களை ப் பெறுவதற்கு வசதி செய்தல். | 2024 ஆண்டு தொடர்பான 19 முற்பண “பி” கணக்குகள் மற்றும் 9 வணிக முற்பணக் கணக்குகளின் வரையறைகளைத் திருத்துவது குறித்து, 2025 ஆம் ஆண்டில் 10 தீர்மானங்களின் கீழ் பிறப்பிக்கப்பட்ட 28 உத்தரவுகள் மூலம் நாடாளுமன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.<br><br>2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணை III.<br><br>மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், ரூ. 20,676 மில்லியன் மதிப்பிலான கடன்கள் /முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், ரூ. 1,700 மில்லியன் வட்டி |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | தேவைக்கேற்ப முற்பணக் கணக்குகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை மாற்றியமைத்தல்.<br><br>2026 ஆம் ஆண்டிற்கான முற்பணக் கணக்கு வரையறைகளை நிர்ணயித்தல். | சரக்குகள் மற்றும் இதர முற்பணக் கணக்குகளை எவ்வித இழப்புமின்றிப் பராமரித்தல். அடுத்த ஆண்டின் 31 ஆம் திகதிக்கு முன்னர் வரையறைகளை திருத்துவதற்கு பாராளுமன்ற ஒப்புதலைப் பெறுதல். முற்பணக் கணக்கைப் பராமரித்தல். | வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.<br><br>மதிப்பாய்வுக் குட்பட்ட ஆண்டில் முற்பணக் கணக்குகள் நட்டமின்றிப் பராமரிக்கப் பட்டுள்ளன.<br><br>ஏறக்குறைய, தொடர்புடைய 05 வணிக முன்பணக் கணக்குகளிலிருந்து ரூ. 2,628 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.<br><br>மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், பொது அலுவலர் கணக்குகளுக்கான 36 முற்பணங்கள் மற்றும் வணிகச் செயல்பாடுகளுக்கான 08 வணிக முற்பணக் கணக்குகளின் வரையறைகளைத் திருத்துமாறு கோரப்பட்டுள்ளது.<br><br>2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் அட்டவணை III. |
| 4. பாராளுமன்ற செயற்குழுக்களுக்கு ஒத்தழைப்பு வழங்குதல் | பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழு (COPA), அரச தொழில் முயற்சிகள் மீதான குழு (COPE), அரச நிதிக் குழு (COPF) கூட்டங்களில் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தல். | 33 ஆம் இலக்க பொது படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க, தேவைப்படும் பங்கேற்பை மேற்கொள் வதற்காக, அழைக்கப்படும் போது நாடாளுமன்றக் குழுக்களில் திணைக்களத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்தல். | செயற்குழு கூட்டங்களில் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அலுவலொருவர் / அலுவலர்கள் பங்குபற்றி உள்ளனர். |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 5. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் உள்ளக முகாமைத்துவம் | பின்வரும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்;<br>(அ) திணைக்கள செயலாற்றுகை அறிக்கை<br>(ஆ) நிதிக் கூற்றுக்கள்<br>(இ) நிதி அமைச்சின் ஆண்டறிக்கையின் செலவின மீளாய்வு அத்தியாயம். | உரிய திகதிக்கு முன்னர் அறிக்கைகளை சமர்ப்பித்தல் | பின்வரும் அறிக்கை கள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும்<br>(அ) செயலாற்றுகை அறிக்கை<br>(ஆ) நிதிக் கூற்றுக்கள் 2024<br>(இ) செலவின மீளாய்வு 2024 |
| | திறன் விருத்தி | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி மூலம் மனித வளத்தை மேம்படுத்துதல் | தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் உத்தியோகத்தர் களுக்கு உள்ளூர் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, 24 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளனர். |
| | திணைக்களத்தின் முற்பணக் கணக்குகளின் கட்டுப்பாடு | முற்பணக்கணக் குகளின் வரையறைபடி தே.வ.செ. திட்டத் திணைக்களத்தின் அனைத்து விண்ணப்பதாரர் களுக்கும் கடன் முற்பணம் வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை கடைபிடித்து, இடர் கடன்கள், சைக்கிள் கடன்கள், விசேட முற்பணங்கள் மற்றும் பண்டிகை முற்பணங்கள் என்பவற்றுக்கு ரூபா 10,999,413.50 வரை வழங்கப்பட்டுள்ளது. |
| | கணக்காய்வு வினவல்களுக்கு பதிலளித்தல். | கணக்காய்வு வினவல்கள குறைத்தல். | கணக்காய்வாளர் நாயக திணைக்களம் அனுப்பிய அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் (கணக்காய்வு வினாக்கள் 07) பதிலளிக்கப்பட்டது. |
| 6. வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களுக்கு (சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆ.அ.வ) வசதி வழங்கல். | தேவையான போது அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடலில் பங்கேற்றல். | அபிவிருத்தி பங்காளர்களுடன் உள்ளக தொடர்புகளை பேணுதல். | தேவைக்கேற்ப பௌதீக ரீதியாகவோ அல்லது மெய்நிகராகவோ அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடலில் பங்கேற்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | | | மேலும், வினவப்படும் பொழுது 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டம் தொடர்பான வரைவு ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல் களுக்குக் கருத்துகள், அவதானிப்புகள் மற்றும் உள்ளீடுகளை வழங்குவதற்காக உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.<br><br>மேலும், பேரண்டப் பொருளாதார சீர்திருத் தங்கள் மற்றும் நன்கொடையாளர்களுட னான பிற கலந்துரையாடல்கள் தொடர்பாக, திணைக்களத்தின் கருத்துகள், அவதானிப்புகள் மற்றும் உள்ளீடுகள் உரிய நேரத்தில் பெறப்படுவது உறுதி செய்யப்பட்டது.<br><br>திறைசேரிக்கான (2026-2029) பொது நிதி முகாமைத்துவ சீர்திருத்த உத்தி மற்றும் செயல் திட்டத்தை உருவாக்குவதற்கான ஒட்டுமொத்த ஒருங்கிணைப்புப் பணியை, தேசிய வரவு செலவுதிட்டத் திணைக்களமானது இக் குழு கூட்டங்க ளையும், திணைக் களத்துடனான பிற கூட்டங்களையும், அத்துடன் IMF தொழில்நுட்ப உதவித் தூதுக்குழுக்களுடனான கூட்டங்களையும் கூட்டுவதன் மூலம் மேற்கொண்டது. |

2025 ஆம் ஆண்டுக்கான அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் பங்களிப்பு

அனர்த்த பதிலளிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு

2025 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தித்வா புயலால் ஏற்பட்ட முன்னெப்போதும் இல்லாத பேரழிவிற்குப் பதிலளிக்கும் விதமாக, தேசிய வரவு செலவுத் திணைக்களம் (NBD) நிவாரணப் பணிகளுக்கான நிதி உந்துசக்தியாக முன்வந்துள்ளது. இது அவசரகால மீட்புப் பொறிமுறையை முன்னெடுத்துச் செல்லவும், உள்கட்டமைப்பை மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு செய்யவும் வளங்களை மீள் ஒதுக்கீடு செய்துள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சீர்குலைந்த வாழ்க்கையை விரைவாக மீட்டெடுப்பதும், மனிதாபிமான உதவிகள் தடையின்றிச் செல்வதை உறுதி செய்வதற்காக நிதியளிப்பை முறைப்படுத்துவதும், பொருளாதாரத்தை மீண்டும் செயல்பட வைப்பதும் தேசிய வரவு செலவுத் திட்ட தி ணைக்களத்தின் பிரதான நோக்கமாக இருந்தது.

தேவைப்படுபவர்களுக்கு அவசரகால நிவாரண உதவிகளையும் மீட்பு மானியங்களையும் வழங்குவதற்கான பெறுகை நடவடிக்கைகளை மாவட்டச் செயலாளர்களும் கோட்டச் செயலாளர்களும் உடனடியாக மேற்கொள்ளும் வகையில், உதவி விநியோகத்தைப் பரவலாக்குவதற்காக தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் விரைவான பதிலளிப்பு வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கைகளை வெளியிட்டது. மேலும், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை வலுப்படுத்துவதற்காக அரசின் நிவாரணத் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான சுற்றறிக்கைகளும் வெளியிடப்பட்டன.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களை வலுப்படுத்தும் திட்டத்திற்கான" சட்ட மற்றும் நிதி கட்டமைப்பை பின்வரும் சுற்றறிக்கைகள் உருவாக்கின.

| சுற்றறிக்கை இல. | விபரம் | திகதி |
|---|---|---|
| **05/2025** | 05/2025 அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தடையின்றி நிவாரணம் வழங்குவதற்கான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு பிரதேச செயலாளருக்கு நிதி அதிகாரங்களை வழங்குதல். | 28-11-2025 |
| **06/2025** | அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒரு திணைக்களத் தலைவர் மற்றும் ஒரு மாவட்டச் செயலாளருக்கு நிதி அதிகாரங்களை வழங்குதல். | 01-12-2025 |
| **07/2025** | அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை விரைவாக மீட்டெடுப்பதற்காக மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்குதல். | 02-12-2025 |
| **08/2025** | அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை வலுவூட்டும் திட்டம் (முழு நிவாரண அட்டவணை) | 05-12-2025 |
| **08/2025(i)** | அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான திட்டத்தின் கீழ் பயிர் சேதங்கள், கால்நடை வளர்ப்போர் மற்றும் மீனவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதில் புதிய துணை வகைப்பாடுகளை இணைத்தல் | 20-12-2025 |
| **08/2025(ii)** | அனர்த்தத்தால் அழிக்கப்பட்ட உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்பவும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்கவும் 2026 ஆம் ஆண்டிற்கான மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குவதற்கான பொறிமுறை | 08-01-2026 |

## 2.2 அரச செலவின முகாமைத்துவம்

### 2.2.1 2025 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தல்

2025 ஆம் ஆண்டிற்கான 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2025.03.21 அன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி, அரசாங்கத்தின் ஒட்டுமொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 5,920 பில்லியன் என்பதுடன், மூலதனச் செலவு மற்றும் கடன் திருப்பிச் செலுத்துதல் முறையே ரூபா 1,315 பில்லியன் மற்றும் ரூபா 1,600 பில்லியனாகவும் உள்ளது.

ஒரு குறிப்பிட்ட நிதியாண்டுக்கான நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த செலவினம், நாடாளுமன்றத்தின் குறைநிரப்பு மதிப்பீடுகளின் ஒப்புதலின் மூலமாகவோ அல்லது நிதி அமைச்சரால் குறைநிரப்பு சிறப்பு சட்ட உத்தரவுகளை வழங்குவதன் மூலமாகவோ, திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை சமர்ப்பிப்பதன் மூலமாகவோ அல்லது ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி ஒதுக்கீட்டினை மீளப்பெறல் மூலமாகவோ திருத்தப்படலாம்.

அதன்படி, 2025 ஆம் நிதியாண்டில், நிதி அமைச்சரால் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 6 குறைநிரப்பு மதிப்பீடுகள், 5 குறைநிரப்பு சிறப்புச் சட்ட ஆணைகள், வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்பட்ட 350 குறைநிரப்பு ஒதுக்கீடுகள் மற்றும் வயர்மன்ட் நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 1,864 இடமாற்றங்கள் ஆகியவற்றின் காரணமாக, குறித்த ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் அமைப்பு பின்வருமாறு திருத்தப்பட்டது.

- மீண்டெழும் செலவினம் - ரூபா. 5,921.6 பில்லியன்
- மூலதனச் செலவினம் - ரூபா. 1,337.5 பில்லியன்
- கடன் மீள்கொடுப்பனவு - ரூபா. 1,618.5 பில்லியன்

அதன்படி, 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ரூபா 8835மில்லியனாக இருந்த மொத்தச் செலவு, ஆண்டின் இறுதியில் ரூபா 8777.3 மில்லியனாகத் திருத்தப்பட்டது.

### 2.2.2 குறைநிரப்பு மதிப்பீடுகள்

2025 ஆம் ஆண்டில், பாராளுமன்றம் 06 குறைநிரப்பு மதிப்பீடுகளை 03 சந்தர்ப்பங்களில் (2025.10.08 மற்றும் 2025.12.05 அன்று) அங்கீகரித்துள்ளது, இதன் மொத்த மதிப்பு ரூபா 151.4 பில்லியன் ஆகும்.

இவ்வாறு, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 15 (1) விதிகளின்படி, மொத்த தேசிய உற்பத்தியில் 13% ஐ விட அதிகமாக இல்லாத விகிதத்தில் முதன்மை செலவினத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கான தேவையைக் கருத்தில் கொண்டு, 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் படி குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் ஏற்பாடுகளைச் செய்யும்போது ஒரே நேரத்தில் சம அளவு ஒதுக்கீடுகளை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, அது மொத்த செலவு மதிப்பீடுகளில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

**அட்டவ ணை 2.2.2 : குறைநிரப்பு மதிப்பீடுகள்**

| குறைநிரப்பு இல. | தலைப்பு இல. | அமைச்சு/திணைக்களம் | செயற்பாடு | தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| Jan-25 | 123 | நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சு | கண்டி வடக்கு பத்ததும்பறை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்திற்காக சீனா எக்ஸிம் வங்கியால் செலுத்தப்படாத கட்டணங்களை நிர்ணயிப்பதற்கும், திட்டத்தின் மீதமுள்ள பணிகளை நிறைவு செய்வதற்கும் உள்ளூர் நிதிகளை வழங்குதல் | 13,285,600,000 |
| Feb-25 | 171 | மகளிர் மற்றும் சிறுவர் நல அமைச்சு | சிங்களப் புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை சலுகை விலையில் வழங்குவதற்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்தான உணவுப் பொட்டலத்தை வழங்குவதற்கும் பட்ஜெட் முன்மொழிவு தொடர்பான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் | 1,500,000,000 |
| Mar-25 | 117 | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு | வீதி அபிவிருத்தித் திட்டத்திற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பெறப்பட்ட கடனின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்காக, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்கான மேலதிக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளைக் கோருதல் | 36,609,000,000 |
| Apr-25 | 243 | நிதி அபிவிருத்தி திணைக்களம் | மூத்த குடிமக்களுக்கு சலுகை வட்டி விகிதங்களை வழங்குவதற்காக அரச வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகையைத் தீர்க்கல் | 31,500,000,000 |
| May-25 | 249 | திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் | 2026.12.31 அன்று காலாவதியாகிவிட்ட மற்றும் காலாவதியாக உள்ள திறைசேரி உத்தரவாதங்களின் அடிப்படையில் அரச வங்கிகளால் பொது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைத் தீர்க்கல் | 18,500,000,000 |
| Jun-25 | 240 | தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் அவசரகால அனர்த்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் சீர்குலைந்த வாழ்க்கையை மீட்டெடுப்பதற்கான ஒதுக்கீடுகளை வழங்குதல் | 20,000,000,000<br>30,000,000,000 |
| | | | **மொத்தம்** | 151,394,600,000 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்*

## 2.2.3 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆவது அட்டவணையில் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கச் செலவினங்களைச் சமாளிக்கும் வகையில், திரட்டு நிதியிலிருந்து பணத்தைப் பெறுவதற்கு அதிகாரம் அளிக்கும் சிறப்புச் சட்ட ஆணைப்பத்திரங்களை வெளியிட நிதி அமைச்சர் அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மேலதிக நிதி தேவையை பூர்த்தி செய்வதற்காக, 2025 ஆம் ஆண்டில், கௌரவ நிதி அமைச்சர் ரூபா 43 பில்லியன் மதிப்புள்ள 05 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்களை பிறப்பித்துள்ளார்.

**அட்டவணை 2.2.3** : **குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்**

| இல. | செலவினத் தலைப்பு | நிறுவனம் | நோக்கம் / குறிக்கோள் | தொகை (ரூபா.) |
|---|---|---|---|---|
| 02 | 016 | பாராளுமன்றம் | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 04/2025 இன் படி சம்பளம் உயர்வைக் கருத்தில் கொண்டு, பாராளுமன்ற பொதுச் செயலாளரின் சம்பளம் வழங்குவதற்காகக் மேலதிக நிதி ஒதுக்கீடு அளித்தல். | 430,000 |
| 03 | 004 | உயர்நீதிமன்ற நிதிபதிகள் | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2025 இன் படி சம்பளம் உயர்வைக் கருத்தில் கொண்டு, உயர்நீதிமன்ற நிதிபதிகளின் சம்பளம் வழங்குவதற்காகக் மேலதிக நிதி ஒதுக்கீடு அளித்தல். | 4,500,000 |
| 04 | 253 | ஓய்வூதியத் திணைக்களம் | பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 15/2025 மற்றும் ஓய்வூதிய சுற்றறிக்கை எண் 01/2025 ஆகியவற்றின்படி, “விதவைகள், தபுதாரர்கள் அநாதைகள் அரச அலுவலர்கள் ஒய்வூதியம்” வழங்குவதற்காகக் மேலதிக நிதி ஒதுக்கீடு அளித்தல். | 3,000,000,000 |
| 05 | 007 | நீதிச் சேவை ஆணைக்குழு | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2025 இன் படி சம்பள உயர்வைக் கருத்தில் கொண்டு, நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காகக் மேலதிக நிதி ஒதுக்கீடு அளித்தல். | 400,000 |
| 06 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | உள்நாட்டுக் கடனுக்கான வட்டியைச் செலுத்துவதற்கு மேலதிக ஒதுக்கீடு களை வழங்குதல். | 39,700,000,000 |
| | | | | 42,705,330,000 |

## 2.2.4 நிதி மாற்றல்

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 5, நிதி ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வைர்மென்ட் நடைமுறைக்கு உட்பட்டு, நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவின வரையறைகளுக்குள் பயன்படுத்தப்படாத விதிகளை நிறுவனங்களுக்கு மாற்ற அனுமதிக்கிறது. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திணைக்களம் ரூபா 336 பில்லியன் தொகையான அத்தகைய 1864 மாற்றங்களுக்கு நிதி பிரமாணக் குறிப்பு 66 மற்றும் 69 அடிப்படையில் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 2.2.5 அபிவிருத்திச் செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் குறைநிரப்பு ஒதுக்கீடுகளை வழங்குதல்

தித்வா புயலால் ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலையைத் தொடர்ந்து, செலவின நிறுவனங்களால் கணிக்க முடியாத அவசர மற்றும் எதிர்பாராத நிதித் தேவைகளை எளிதாக்குவதற்கும், நிவாரணப் பணிகளை எளிதாக்குவதற்கும், 2025 ஆம் ஆண்டில், தேசிய வரவு செலவுத் திட்டத் தி ணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ், “வருடாந்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக் கருத் திட்டம்” மற்றும் “அனர்த்த நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டம்” ஆகியவற்றின் மூலம் குறை நிரப்பு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

அதன்படி, 2025 ஆம் ஆண்டில், மேற்கூறிய நோக்கங்கள் தொடர்பாக, பல்வேறு செலவின நிறுவனங்களுக்கு ரூ.136 பில்லியன் துணை ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பான அறிக்கைகள், 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் தேவைக்கு இணங்க, அவ்வப்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டு தொடர்பாக அத்தகைய 09 அறிக்கைகள் பாராளுமன்றத்தி சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், வழங்கப்பட்ட அத்தகைய மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பான விவரங்கள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அ மைச்சின் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 2.2.6 அரசாங்க செலவினம்

2025-ஆம் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்துதல்கள் உட்பட மொத்த அரசாங்கச் செலவினம் ரூ. 7,698 பில்லியனாக இருந்ததுடன் இது 2024 ஆம் ஆண்டில் இருந்த ரூ. 10,806 பில்லியன் தொகையுடன் ஒப்பிடும்போது 28.7 சதவீதம் அல்லது பெயரளவு மதிப்பில் ரூ. 3,108 பில்லியன் குறைவு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025-ஆம் ஆண்டில் பதிவாகிய ரூ.5,263 பில்லியன் மீண்டெழும் செலவினமானது பதிவாகிய மொத்த அரசாங்கச் செலவினமான ரூ.7,698 பில்லியனில் 68.37 சதவீதத்தைக் குறிக்கிறது. இது 2024-ஆம் ஆண்டின் மொத்த மீண்டெழும் செலவினமான ரூ.5,370 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2025-ஆம் ஆண்டில் 1.9 சதவீதம் குறைவாகும். 2025 ஆம் ஆண்டின் மூலதனச் செலவினம் ரூ.1,015.8 பில்லியனாக இருந்தது. இது 2024 ஆம் ஆண்டில் பதிவாகிய ரூ.817.09 பில்லியனுடன் ஒப்பிடும்போது 24.3 சதவீதம் அதிகமாகும்.

ரூபா 5,370 பில்லியனுக்கு இணையான மொத்த அரசாங்க செலவினத்தில் 49.7% மீண்டுடெழும் செலவினமாகும். இது 2023 இல் இருந்த ரூபா 4,729 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இல் 13.5 சதவீதம் அதிகரித்துள்ளது. 2024 இல் மொத்த மூலதனச் செலவு ரூபா 817.09 பில்லியனாக இருந்ததுடன், 2023 இல் ரூபா 932.74 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இது 12.4 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

எனவே, 2024 இல் 53.5 சதவீதமாக இருந்த அரசாங்க மூலதனச் செலவினங்களின் பயன்பாட்டு விகிதம் 2025 இல் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து 76சதவீதம் வரை கணிசமாகக் அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் பொதுப் படுகடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினம் ரூபா 1419 பில்லியனாக இருந்ததுடன், 2024 இல் ரூபா 4618 பில்லியனாக இருந்த பொதுப் படுகடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினத்துடன் ஒப்பிடும் போது, 62.2 சதவீதம் வீழ்ச்சி காணப்பட்டது.

**அட்டவணை 2.2.6 : 2025 - ஆம் ஆண்டில் செலவினப் பிரிவுகளின்படி அரசாங்கச் செலவினம்**

| | ரூ. பில். | மீண்டெழும் செலவினங்களின் சதவீதம் | மொத்த செலவினத்தின் சதவீதம் |
|---|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | **5,263.01** | **100** | **68.37** |
| மத்திய அரசாங்கத்தின் ஆள்சார் வேதனங்கள் | 786.33 | 14.94 | 10.21 |
| பயணச் செலவுகள் | 6.74 | 0.13 | 0.09 |
| விநியோகங்கள் | 340.43 | 6.47 | 4.42 |
| பராமரிப்பு செலவினம் | 14.21 | 0.27 | 0.18 |
| சேவைகள் | 103.18 | 1.96 | 1.34 |
| மாற்றல்கள் (மாகாண சபைகள் மற்றும் அரச நிறுவன மாற்றல்கள் உட்பட) | 1,510.74 | 28.70 | 19.63 |
| வட்டி செலுத்துதல்கள் மற்றும் தள்ளுபடிகள் | 2,500.67 | 47.51 | 32.48 |
| இதர மீண்டெழும் செலவினங்கள் | 0.70 | 0.01 | 0.01 |
| | **ரூ. பில்.** | **மீண்டெழும் செலவினங்களின் சதவீதம்** | **மொத்த செலவினத்தின் சதவீதம்** |
| **மொத்த மூலதனச் செலவினம்** | **1,015.82** | **100** | **13.20** |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 84.64 | 8.33 | 1.10 |
| மூலதனச் சொத்துக் களைக் கையகப்படுத்துதல் | 375.13 | 36.93 | 4.87 |
| மூலதனச் சொத்துக்களின் இடமாற்றம் | 148.98 | 14.67 | 1.94 |
| நிதிச் சொத்துக்களைக் கையகப்படுத்துதல் | 142.01 | 13.98 | 1.84 |
| திறன் மேம்பாடு | 4.97 | 0.49 | 0.06 |
| இதர மூலதனச் செலவினங்கள் | 260.10 | 25.60 | 3.38 |
| **பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்துதல்** | **1,419.12** | | **18.43** |
| **மொத்த செலவினம்** | **7,697.95** | | **100** |

## 2.2.7 அனர்த்த முகாமைத்துவம் மீதான செலவினம்

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தில் உருவாகி வரும் முன்னுரிமைகளை நிறைவேற்றுவதற்காக மூலதனச் செலவினங்களை மீள் ஒதுக்கீடு செய்ய உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. பல்வேறு செலவினத் தலைப்புகளில் பயன்படுத்தப்படாத ஒதுக்கீடுகளைக் கண்டறிவதன் மூலம், தேசிய வரவு செலவுத்திட்டத்

திணைக்களத்தின் முதன்மைச் செலவின உச்சவரம்பில் எந்தப் பாதிப்பும் ஏற்படாமல், 2025 ஆம் ஆண்டில் 50 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நிதி மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**அட்டவணை 2.2.7 : அனர்த்த நாளிலிருந்து 2025.12.31 வரை நிதி ஏற்பாடுகள்**

| நிதி வழங்கப்பட்ட அமைச்சு /திணைக்களம் | வழங்கப்பட்ட நிதி (ரூ. மில்) |
|---|---|
| வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | **48,467.9** |
| *பாதுகாப்பு அமைச்சு* | *34,736.0* |
| *புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு* | *31.9* |
| *கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு* | *1,000.0* |
| *கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்* | *7,500.0* |
| *கமத்தொழில் திணைக்களம்* | *3,000.0* |
| *விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்* | *2,200.0* |
| அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்புகளின் பராமரிப்புக்கான செலவினம். | **221.4** |
| *பாதுகாப்பு அமைச்சு* | *131.4* |
| *வட மாகாண சபை* | *90.0* |
| அனர்த்தத்தினால் சேதமடைந்த உட்கட்டமைப்புகளை புனரமைப்பதற்கான செலவினம். | **465.7** |
| *வட மாகாண சபை* | *465.7* |
| **மொத்தம்** | **49,155.0** |

## 2.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

முற்பணக் கணக்குச் செயற்பாடுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள் மூலம் செயற்படுத்தப்படும் ஆதனக் கடன்கள் மற்றும் அரசாங்கத்தால் இயக்கப்படும் வணிக இயல்புகளின் செயற்பாடுகளைத் தவிர, அரச அலுவலர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களை உள்ளடக்கியது. 2025 வருடத்தின் போது அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் மற்றும் கடன்களை வழங்குவதற்காக 167 கணக்குகள் மற்றும் வர்த்தக ரீதியான செயற்பாடுகளுக்காக 11 கணக்குகள் உட்பட 178 கணக்குகள் தொடர்பான அதிகபட்ச செலவின வரம்புகள், வரவுகளின் குறைந்தபட்ச வரம்புகள், பற்று இருப்பின் அதிகபட்ச வரம்புகள் மற்றும் பொறுப்புகளின் அதிகபட்ச வரம்புகளை பாராளுமன்றம் விதித்தது.

### 2.3.1 செலவினங்களின் ஆகக்கூடிய வரையறைகள்

178 முற்பணக் கணக்குகளுக்கு விதிக்கப்பட்ட அதிகபட்ச செலவின வரம்பு ரூபா 44.218 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2025 ஆம் ஆண்டுக்கான உண்மையான செலவு ரூபா 33.39 பில்லியனாக இருந்தது. மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட அதிகபட்ச செலவினத்திலிருந்து ஒட்டுமொத்தமாக 77% பயன்படுத்தப்பட்டது. அரச அலுவலர்களுக்கு முற்பணம் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து

98% சதவீதமும், வணிக முற்பணக் கணக்குகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து 57% சதவீதமும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கல்வித் திணைக்களத்தின் 213 செலவினத் தலைப்பின் கீழ் உள்ள அச்சிடுதல், விளம்பரம் மற்றும் வெளியீடுகளின் விற்பனைக்கான முற்பண கணக்கின் கீழ் உள்ள செலவுகள் ஆகியவை எதிர்பார்த்தபடி உணரப்படவில்லை.

### 2.3.2 பெறுகைகளின் ஆகக்குறைந்த வரையறைகள்

அரசாங்கத்தின் முன்கூட்டிய கணக்குகள் மூலம் எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச வரவுகள் ரூபா 36.218 பில்லியனாகவும், உண்மையான வரவுகள் ரூபா 28.06 பில்லியனாகவும் இருந்தது. அரசாங்க அலுவலர்களின் முன்கூட்டிய கணக்கிலிருந்து எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச பெறுகைகள் நிறைவேற்றப்பட்ட போதிலும், மேலே 2.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கல்வித் திணைக்களத்தின் 21302 செலவினத் தலைப்பின் கீழ் குறைந்தபட்ச பெறுகைகள் இலக்குகள் அடையப்படவில்லை, இதனால் அது நிறைவேற்றப்படவில்லை. குறைந்தபட்ச பெறுகைகளின் வரையறைகள் தொடர்பான ஒட்டுமொத்த இலக்குகளை உணரவும்.

### 2.3.3 அரச அலுவலர்களின் முற்பண "பி" கணக்குகளின் வட்டி வருமானம்

அரச அலுவலர்களுக்கு முற்பணங்கள் மற்றும் கடன்களை வழங்குவதற்காக 2025 ஆம் ஆண்டில் 167 கணக்குகள் பேணப்பட்டுள்ளதுடன், மேற்படி முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் மூலம் 2025 ஆம் ஆண்டில் 1,700 மில்லியன் ரூபாய்கள் திரட்டு நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.4 வணிகம், களஞ்சியங்கள், பிற முற்பணக் கணக்கு நிதிச் செயலாற்றுகை

ஏனைய 11 முற்பணக் கணக்குகள் 09 செலவினத் தலைப்புகளின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றதுடன், மேற்படி கணக்குகளில் 02 களஞ்சிய முற்பணக் கணக்குகளாகவும் 04 பிற முற்பணக் கணக்குகளாகவும் பராமரிக்கப்படுகின்றன. இந்தக் கணக்குகளிலிருந்து இலாபம் அல்லது நட்டம் எதிர்பார்க்கப்படுவதில்லை. 05 உற்பத்தி மற்றும் வர்த்தக நோக்கங்களுக்கான முற்பணக் கணக்குகள் இலாபகரமான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் 2025 இல் 2628 மில்லியன் ரூபாய் திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.5 முற்பண வரையறைகளுக்கான திருத்தம்

அரச அலுவலர்களுக்கு முற்பணங்களை வழங்குவது தொடர்பான 36 கணக்குகளின் வரையறைகளும், வர்த்தக இயல்புடைய செயற்பாடுகள் தொடர்பான 08 வர்த்தக கணக்குகளின் வரையறைகளும் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் திருத்தப்பட்டுள்ளன.

## காலநிலை வரவு செலவுத்திட்டக் குறியிடல் முன்னெடுப்பு

இலங்கை அதிகரித்து வரும் காலநிலை தொடர்பான இடர்களை எதிர்கொள்வதாலும், பாரிஸ் உடன்படிக்கை மற்றும் அதன் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளின் (NDCs) கீழ் சர்வதேசக் கடமைகளை ஏற்றுக் கொண்டு உள்ளதாலும், பொது நிதி முகாமைத்துவ முறைமைகளை தேசிய காலநிலை முன்னுரிமை களுடன் சீரமைப்பது அவசியமாகிறது. காலநிலை வரவுசெலவுத் திட்டக் குறியிடல் (CBT), காலநிலை நிதியில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை மேம்படுத்து கிறது. சான்றுகளின் அடிப்படையிலான கொள்கை முடிவெடுப் பதை ஆதரிப்பதுடன், பல்துறை ஒருங்கிணைப்பை மேம்படுத்து கிறது. மேலும் சர்வதேச காலநிலை நிதியுதவிக்கான அணுகலை எளிதாக்கு கிறது. CBT இனைச் செயற்படுத் துவது, அரசாங்கத்தின் நிதிக் கட்டமைப் பிற்குள் காலநிலைக்கேற்ற வரவுசெலவுத் திட்ட நடைமுறைகளை நிறுவனமயமாக்கு வதற்கான ஒரு மூலோபாயப் படியாக அமைகிறது.

இந்நோக்கத்திற்காக, தேசிய வரவு செலவுத் திணை, ஐக்கிய நாடுகள் அபிவிருத்திட்டத் துடன் (UNDP) இணைந்து, காலநிலை வரவு செலவுத் திட்டக் குறியீட்டை முன்னெடுத்தது. அதன் செயலாக் கத்திற்கு வழிகாட்டவும் மேற்பார்வையிடவும் ஒரு வழிகாட்டுக் குழு அமைக்கப்பட்டது. மேலும், இத்துறை, UNDP உடன் இணைந்து, அந்நிறுவனத்தின் பங்குதாரர்களின் பங்கேற்புடன், 2025 டிசம்பரில் CBT குறித்த இரண்டு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தியது. இந்த முன்னெடுப்பு, காலநிலைக்கு உகந்த வரவு செலவுத் திட்ட நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் தேசிய காலநிலை உறுதி மொழிகள் மற்றும் நிலையான வளர்ச்சி நோக்கங்களை ஆதரிப்பதற்கும் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்.







# 3 வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்

## 3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

